

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (25.10.2023) 234/77 ஆய்வுப் பயணத்திட்டத்தின் கீழ் ஒரே நாளில் தேனி மாவட்டத்தின் 4 சட்டமன்ற தொகுதிகளிலும் ஆய்வு மேற்கொண்டார். அதை தொடர்ந்து மதுரை மாவட்டத்தின் திருமங்கலம், உசிலம்பட்டி மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகர், சாத்தூர் சட்டமன்ற தொகுதிகளிலும், தூத்துக்குடியில் கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியிலும் தொடர் ஆய்வு மேற்கொண்டார். அன்று ஒரு நாளில் மட்டும் 9 சட்டமன்ற தொகுதிகளில் அமைச்சர் நேரடி ஆய்வுகளை மேற்கொண்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடினார். பள்ளிகள், நூலகம், மாவட்ட கல்வி அலுவலகம், வட்டாரக் கல்வி அலுவலகம் என பயணித்து பணியாளர்கள் மற்றும் பயனாளர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து விரைவில் அதன் மீது தீர்வு காணப்படும் என உறுதியளித்தார்.



சென்னை நந்தனத்தில் உள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கூட்டரங்கில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்பி.மூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் (25.10.2023) அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி.ஜகந்நாதன் மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழக ஆளுநர் வரம்புமீறி பேசியதற்கு டி.ஆர்.பாலு எம்.பி. விளக்கம் கொடுத்துள்ளார்!

# சுதந்திர போராட்டத் தியாகிகளுக்கு தி.மு.க. அரசு உரிய மரியாதை!

## புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி பேட்டி!

*புதுக்கோட்டை, அக். 27-*

புதுக்கோட்டை மாவட்டம் 9எ நத்தம்பண்ணை ஊராட்சியில் பகுதி நேர ரேஷன் கடையை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், ஆட்சியர் மெர்சி ரம்யா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா ஆகியோர் திறந்து வைத்தனர்.



இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, ஆட்சி மாற்றம் ஏற்படும் போது கடந்த ஆட்சி செய்தவர்கள் தொடங்கிய திட்டத்தை ஆட்சி செய்பவர்கள் திறந்து வைப்பது வழக்கமான ஒன்று எடப்பாடி பழனிச்சாமி கூறுவது போன்று அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் தொடங்கிய திட்டத்தை தான் நாங்கள் தொடங்கி வைக்கிறோம் என்று கூறுவது தவறு. கிங்ஸ் மருத்துவமனை கலைஞர் நூற்றாண்டு நூலகம் உள்ளிட்ட பல திட்டங்கள் தி.மு.க. ஆட்சி காலத்தில் தொடங்கியதுதான் ஒரு சில திட்டங்கள் மட்டும் அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டதை நாங்கள் தொடங்கி வைத்துள்ளோம். அது இயற்கையான ஒன்று.

ஒரு ஆளுநர் எப்படி நடந்து கொள்ள வேண்டும். எப்படி செயல்படக் கூடாது என்பதற்கு அளவுகோல் உள்ளது. ஆனால் தமிழக ஆளுநர் வரம்புமீறி பேசியதற்கு டி.ஆர்.பாலு எம்.பி. விளக்கம் கொடுத்துள்ளார்.

சுதந்திர போராட்டத் தியாகிகளுக்கு தி.மு.க. அரசு உரிய மரியாதை அளித்து வருகிறது. சுதந்திர போராட்டத் தியாகிகள் தலைவர்கள் ஆகியோர்களுக்கு நினைவு மண்டபங்கள் அமைத்து ஒவ்வொரு ஆண்டும் அவர்களது நினைவை விழாக்கள் எடுத்து நடத்தி வரும் ஒரே அரசு தி.மு.க. அரசுதான். இந்த வரலாறு எல்லாம் தமிழில் இருப்பதால் ஆளுநருக்கு புரியவில்லை அவர் யாரோ எழுதிக் கொடுத்ததை வாசிக்கிறார். காங்கிரஸ் தி.மு.க.வை வளர்க்க வேண்டியதில்லை, தி.மு.க. ஏற்கனவே வளர்ந்த கட்சி தான் நாங்கள் எங்களை வளர்த்துக் கொள்கிறோம். அவர்கள் அவர்களை வளர்த்துக் கொள்கிறார்கள். பா.ஜ.க.வின் B டீம் தான் அ.திமு.க., சிறுபான்மையர்கள் வாக்கு ஒருபோதும் அ.தி.மு.க.விற்கு கிடைக்காது. சிறுபான்மையின ருக்கு எதிராக சட்டங்கள் கொண்டு வந்த போது இ.பி.எஸ். எங்கே சென்றார். எங்கே போய் ஓடி ஒளிந்து கொண்டார்?

எடப்பாடி பழனிச்சாமி பிரதமராக அனைத்து வாய்ப்புகளும் உள்ளது என முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி கூறி இருப்பது, ரொம்ப மகிழ்ச்சியான செய்தி, அவர் எப்போதுமே நகைச்சுவையாக பேசக்கூடியவர், இதை ஒரு ஜோக்காக எடுத்துக் கொள்ளலாம். மகளிர் உரிமை திட்டத்தில் மாதந்தோறும் ரிவ்யூ செய்யப்படும் என்று அரசு உத்தரவிட்டது பொது மக்களுக்கு லாபம்தான். தகுதியான நபர்கள் இதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டு அவர்களுக்கு உரிமைத் தொகை போய் சேரும் என்றார்.

# உள்ளாட்சியில் பெண்களுக்கு 50% ஒதுக்கீடு தந்த ஆட்சி தி.மு.க.!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பேச்சு!

*நாமக்கல், அக். 27-*

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, பொறியாளர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி ஆகியவை இணைந்து நடத்திய ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் நளா ஹோட்டலில் நடைபெற்றது.

இக்கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நாமக்கல் திமுக தெற்கு நகரச் செயலாளர் ராணா ஆனந்த், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பொன்.சித்தார்த், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ப.கிருபாகரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சத்தியசீலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி.

பெண்களுக்கான சொத்தில் சம உரிமை வழங்குகின்ற சட்டம் முன் மொழிவின் போது பிரதமராக நேரு இருந்தார். பாராளுமன்றத்தில் அந்த சட்டம் முன்மொழிவு தோற்கடிக்கப்படுகிறது. அப்போது பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்குகின்ற சட்டம் தோற்றுப் போய் இருக்கலாம். ஆனால் இந்த சட்டத்தை ஒரு நேரத்தில் ஒரு காலத்தில் இந்தியாவிலே நிறைவேற்றுவதற்கு ஒருவன் பிறப்பான். அவன் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவான் என்று டாக்டர் அம்பேத்கர் சொன்னார். அதை நிறைவேற்றிய ஒரே தலைவர் கலைஞர் அவர்கள். சம உரிமை வேண்டும் என்பதிலே இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவிற்கு பணியாற்றி வருகிறது என்பதை நீங்கள் உணர வேண்டும். அதனால் இந்த தகவல் தொழில்நுட்ப பணியிலே இன்றைக்கு இணைந்து உங்களுக்கென்று சில பொறுப்புக்கள் வழங்கப்பட்டு அதிலே பணியாற்றி இருக்கிறீர்கள். நீங்கள் கழகத்தின் குடும்பத்திலிருந்து வந்தவர்களாக கூட இருக்கலாம். கழகத்திலே தொடர்புடையவர்களாக இருக்கலாம். புதியவர்களும் இருக்கலாம். அவர்களையும் நீங்கள் இன்றைய தினம் தகவல் தொழில் நுட்ப அணியில் இணைத்துள்ளீர்கள். இன்றைய தினம் கூட்டம் மாவட்ட அளவிலே இன்றைக்கு நிர்வாக பொறுப்பில் இருக்கக்கூடிய இளைஞர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, மாணவர் அணி, பொறியாளர் அணி என நான்கு அணியும் ஒருங்கிணைந்து இந்த கூட்டம் இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.



தமிழகத்தில் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என கூறி தி.மு.க. சார்பில் 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து பெறும் கையெழுத்து இயக்கம் போன்ற பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. அதற்காக நமது நாமக்கல் மாவட்டம் முழுவதும் 2 லட்சம் கையெழுத்து வாங்க வேண்டும். அதற்காக மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் என அனைவரும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களுடன் வார்டு தி.மு.க. நிர்வாகிகளுடனும் இணைந்து செயல்பட வேண்டும் என்றார்.




தேவகோட்டை தெற்கு ஒன்றிய தி.மு.க - சிவகங்கை மாவட்டம்